2013 ஏப்ரல் 22]

அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 294, மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

294—

புதிய வட்டம்

***20785—திரு. கா. தமிழரசன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒத்தக்கடையைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை வடக்கு வட்டத்தைப் பிரித்து, புதிய மதுரை கிழக்கு வட்டம் ஏற்படுத்த மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் முதற்கட்ட அறிக்கை உயர்மட்டக் குழுவிற்கு வந்துள்ளது. இதுகுறித்த முழுமையான செயற்குறிப்புகள் பெறப்பட்டவுடன் மேற்சொன்ன வட்டம் பிரிப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் நிரந்தரப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு முதலமைச்சர் ஏழைகளின் இதயம், தமிழகத்தை முதல் மாநிலமாக

[2013 ஏப்ரல் 22

ஆக்கிக் கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கின்ற திட்டங்களை இந்தியாவில் எந்த மாநிலத்தில் தேர்தல் வந்தாலும் அம்மா அவர்களுடைய திட்டங்களை காப்பி எடுத்துக் கொண்டு அறிவித்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) வெற்றி பெற முடியுமென்ற எண்ணத்தை அனைத்து மாநிலத்திலும் தேர்தல் அறிக்கையாக கொடுத்துக் கொண்டிருக்கின்றவேளையில், தமிழ்நாட்டை முதல் மாநிலமாக ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்கள் பாடுபடுகிறார்கள். சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை கிளைக் கழகப் பிரதிநிதியாக்கி, ஒன்றியக் கழக இணைச் செயலாளராக ஆக்கி, ஒன்றியக் கழகச் செயலாளராக்கி, மாவட்ட அம்மா பேரவைச் செயலாளராக்கி, 3 முறை ஊராட்சி மன்றத் தலைவராக்கி, இப்போது நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் வேட்பாளராக்கி, மதுரை கிழக்குத் தொகுதியில் தங்கத் தாய் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வேகாத வெயிலில் தேர்தல் பிரச்சாரம் செய்து என்னை வெற்றி பெறச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) தங்கத் தலைவியினுடைய பாதந்தொட்டு வணங்கி, நான் சாதாரணத் தொண்டன், இந்தச் சட்டமன்றத்தைப் பார்க்க வருவதற்கு எத்தனை எம்.எல்.ஏ.-க்களிடம் கையெழுத்து வாங்கி அரை மணி நேரம் பார்ப்பதற்கு காத்துக் கொண்டிருந்தேன். நான் 1991–1996–ல் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலிருந்தபொழுது ஒரு சட்டமன்ற உறுப்பினரின் கையெழுத்தை வாங்கி சட்டமன்றத்தைப் பார்த்தேன். ஆனால், இன்றைக்கு நிலைமையைப் பார்க்கிறபோது என்னுடைய தங்கத் தலைவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னுடைய கையெழுத்தை வாங்குவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மற்றவர்கள் என் அலுவலகம் வருவதைப் பார்க்கும்போது அவ்வளவு சந்தோஷமாக இருக்கின்றேன். அப்படிப்பட்ட என் தலைவி அவர்கள் 2000–ன்போது என்னுடைய மேலூர் தொகுதிலுள்ள கொட்டாம்பட்டிக்கு என் மகனுடைய காதணி விழாவுக்கு வந்து அவர்கள் தலைமையில் என் மகனின் காதணி விழாவை நடத்தி வைத்தார்கள். அந்த சந்தோஷத்தையே என்னால் தாங்க முடியாமல் என் குடும்பம் இருந்தபோது என்னை சட்டமன்ற உறுப்பினராக்கி (மேசையைத் தட்டும் ஒலி) என்னை இந்த அவைக்கு அனுப்பி, அவையைப் பார்க்க விரும்புவோருக்கு என்னுடைய கையெழுத்தும் தேவைப்படுகின்ற அளவுக்குக் கொண்டுவந்து விட்ட என் தலைவியைப் பாதந்தொட்டு வணங்கி, என் கேள்வியைத் தொடங்குகின்றேன்.

2013 ஏப்ரல் 22]

மதுரை மாவட்டத்திலுள்ள மிகப் பெரிய தாலுகா, வடக்கு தாலுகா, இந்த தாலுகாவினுடைய சுற்றளவு 45 சதுர கிலோ மீட்டராகும். 12 உள் வட்டங்கள் கொண்டதாகும். 134 வருவாய் கிராமங்களையும், 71 ஊராட்சிகளையும், 13 மாநகராட்சி மன்ற உறுப்பினர்களையும் கொண்டதாகும். இங்கு மக்கள்தொகை 3 இலட்சத்து 48 ஆயிரத்திற்கும் மேல் உள்ளது. ஆகவே, இந்த தாலுகாவை மாநகராட்சியில் பல பகுதிகள் இருக்கின்ற காரணத்தினால் இதைக் கிராம மக்கள் அனைவரும் ஏற்கெனவே சின்னச்சின்ன திட்டங்களுக்கு தாலுகா ஆபீசுக்கு போக வேண்டிய காலம் இருந்தது. இப்போதுதான் அம்மா அவர்கள் சாதாரண ஏழை மக்களுக்கு முதியோர் உட்பட அனைவருக்கும் பல நலத் திட்டங்களை அறிவித்து விட்டார்கள். அதனால் எல்லோரும் தாலுகா ஆபீசுக்கு போக வேண்டிய கட்டாயம் வந்துவிட்டது. மாநகராட்சியில் கலெக்டர் அலுவலகத்திற்குப் பக்கத்தில் எங்களுடைய வடக்கு தாலுகா அலுவலகம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் கொடுக்கின்ற திட்டங்கள் மக்களுக்கு சென்றடையும்வகையில் இந்த வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒத்தக்கடையை தலைமையிடமாகக் கொண்டு ஒரு தாலுகாவை கொடுத்தால் கிழக்கு தொகுதி மக்கள் அனைவரும் அம்மா அவர்களை மீண்டும் மீண்டும் பாராட்டிக் கொண்டே இருப்பார்கள் என்று சொல்லிக் கொண்டு, எங்களுடைய தாலுகாவைப் பிரிப்பது பற்றி இந்த வருடமே ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் சொல்லியிருக்கின்றார். அதை இந்த வருடமே அமைத்துக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக் கொண்டு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி, மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு நிருவாகம் செம்மையாக நடைபெற வேண்டுமென்று தேவைப்படுகிற இடங்களில் எல்லாம் புதிய வட்டங்களை அமைக்க வேண்டும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டு, அதற்காக மாவட்ட

ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து வரக்கூடிய கருத்துருக்களையெல்லாம் ஆய்வு செய்வதற்காக வருவாய் நிருவாக ஆணையர், நில நிருவாக ஆணையர் நிலச் சீர்திருத்த ஆணையர் தலைமையிலே ஓர் உயர் மட்டக் குழுவை அமைத்து அந்த உயர்மட்டக் குழுவானது, தேவைப்படுகிற மாவட்டங்களில் தேவைப்படுகிற வட்டங்களில் இருக்கக்கூடிய பரப்பளவு, இருக்கக்கூடிய மக்கள்தொகை, இருக்கக்கூடிய வருவாய் கிராமங்களினுடைய எண்ணிக்கையின் அடிப்படையில் புதிய வட்டங்களைப் பிரிப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மதுரை வடக்கு வட்டத்தை இரண்டாகப் பிரித்து ஒத்தக்கடையைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை கிழக்கு வட்டம் ஏற்படுத்தப்படுமா என்று வினா எழுப்பியிருக்கின்றார்கள். இந்த வினாவினுடைய அடிப்படையிலே பரப்பளவைப் பொறுத்தவரையிலே இன்றைக்கு 250 சதுர கிலோ மீட்டர் இருந்தால் ஒரு புதிய வட்டம் ஏற்படுத்தப்படும் என்கிற அரசினுடைய குறிப்பின் அடிப்படையிலே, சதுர கிலோ மீட்டரினுடைய அளவுகோலானது பூர்த்தியடையாமலிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலும், மக்கள்தொகை அடர்த்தியாக இருக்கின்ற காரணத்தினாலும் அதே அடிப்படையிலே வருவாய் கிராமங்களின் எண்ணிக்கை தேவைக்கு அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலேயும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கின்ற ஒத்தக்கடையைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை கிழக்கு வட்டம் ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மகிழ்ச்சியாக இருக்கிறது, இன்னொரு கேள்வி இருக்கிறதா?

திரு. கா. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு உடன் செய்து விடுவதாக சொன்னதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.